**DEPOSITION OF WITNESS**

**{Chapter XXIII Code of Crl. Procedure}**

**IN THE COURT OF XXV METROPOLITAN MAGISTRATE COURT, EGMORE, CHENNAI-08.**

| | |
|---|---|
| Case No | : 5083/2023 |
| Deposition of Witness | : PW 20 |
| Name | : திரு. கணேஷ் |
| Husband/ Father Name | : நரசிம்மன் |
| Age | : 35 |
| முகவரி | : Flat No. 2B, Suresh Residency, Muthu Nagar, Sriragam, Tirchy- 620006. |

Solemnly affirmed in accordance with the provision of the oaths act 1969 on the day of 24.03.2026. (**Time -02.08** பிற்பகல்)

இன்றைய தினம் 1, எதிரி ஆஜர். 2, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை. 5 வது எதிரிக்கு வழக்கில் ஆஜராக விலக்களிக்கப்பட்டுள்ளது. 5 எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியின் அடையாளம் அவருடைய ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் உறுதி செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சார்பதிவாளர் (பொறுப்பு) எண் 3 இணை சார்பதிவாளர் அலுவலகம் திருச்சிராப்பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக தகவல் கொடுக்கும்போது நான் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் ( பொறுப்பு) ஆக பணிபுரிந்து வந்தேன். சென்னை மாநகர காவல் உதவி ஆணையர் அலுவலகத்தில் இருந்து 21.07.2022 தேதியிட்ட கடிதம் எங்கள் அலுவலகத்திற்கு வந்தது. அதில் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகம் தொடர்புடைய பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல், அந்த ஆவணம் பதிவு செய்த கைரேகை பதிவேட்டில் சான்றிட்ட நகல் ஆகிய கோரப்பட்டிருந்தது.

2. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடிதம் ஆகும். அந்த கடிதம் **அசாஆ 133** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் கடித

எண் 471/2022 நாள் 26.07.2022 தேதியிட்ட கடிதம் மூலம் மேற்படி வேண்டுகோள் கடிதத்தில் கோரியிருந்த ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடிதம் நான் அனுப்பி வைத்த கடிதம் ஆகும். அந்த கடிதம் அசாஆ 134 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 20.10.2009 தேதியிட்ட பொது அதிகார ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் மற்றும் விரல் ரேகை பதிவேட்டின் சான்றிட்ட நகல் ஆகியவை நான் அனுப்பி வைத்த ஆவணங்கள் ஆகும். அவைகள் முறையே அசாஆ 135 மற்றும் 136 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் மீண்டும் சென்னை பெருநகர காவல் உதவி ஆணையர் அலுவலகத்தில் இருந்து 21.07.2022 தேதியிட்ட கடிதம் வரப்பட்டது. அதில் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ரத்து பத்திர ஆவண எண் 112/2008/ 4 வது புத்தகம் என்ற ஆவணத்தின் சான்றிட்ட நகல் மற்றும் கைரேகை பதிவேட்டின் சான்றிட்ட நகல் கோரப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படம் கடிதம் எனக்கு வரப்பட்ட கடிதம் ஆகும். அந்த கடிதம் அசாஆ 137 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மேற்படி கடிதத்திற்கு 26.07.2022 தேதியிட்ட கடித எண் 472/2022 மூலம் அதில் கோரியிருந்த ஆவணங்களின் சான்றிட்ட நகல் அனுப்பி வைத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடிதம் மற்றும் ஆவணங்கள் நான் அனுப்பி வைத்தவை ஆகும். அவைகள் முறையே நான் அனுப்பிய பதில் கடிதம் அசாஆ 138 ஆகவும், 27.02.2008 தேதியிட்ட பொது அதிகார ரத்து பத்திரத்தின் நகல் அசாஆ 139 ஆகவும், அந்த ஆவணத்திற்கான விரல் ரேகை பதிவேட்டில் சான்றிட்ட நகல் அசாஆ 140 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

5. நான் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்த காலக்கட்டத்தில் பணிபுரிந்தேன் என்றால் 22.05.2022 முதல் ஆகஸ்டு 2022 வரை பணிபுரிந்தேன்.

போலீஸ் வேண்டுகோள் கடிதம் அசாஆ 133 ஆவணத்தில் என்ன தேதி போடப்பட்டுள்ளது என்றால் 21.07.2022 ஆகும். அசாஆ 137 ஆவணத்தில் 21.07.2022 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 137 ல் பதிவு தபால் அனுப்பியதற்கான ரசீது ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 133 ஆவணத்தில் பதிவு தபால் அனுப்பியதற்கான ரசீது ஒட்டவில்லை என்றால் சரிதான். போலீஸார் ஒரே அலுவலகத்திற்கு ஒரே தேதியிட்ட இரண்டு வேண்டுகோள் கடிதங்கள் ஒரே வழக்கிற்காக எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான்.

6. அசாஆ 133 மற்றும் 137 ஆவணங்களில் அந்த ஆவணங்களை எழுதி கொடுத்த நபர்களின் வசிப்பிடம் மற்றும் அடையாள ஆவணங்களின் சான்றிட்ட நகல் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடிதங்களுக்கு நான் அனுப்பிய பதில் கடிதங்களான அசாஆ 134 மற்றும் 138 கடிதங்களின் அதை எழுதி கொடுத்த நபர்களின் வசிப்பிடம் மற்றும் அடையாள ஆவணங்களின் சான்றிட்ட நகல் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பதிலில் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்தவர்களின் அடையாளம் மற்றும் வசிப்பிட முகவரிகளுக்கான ஆவணங்கள் அந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 135 மற்றும் 139 ஆவணங்களுடன் அதை எழுதி கொடுத்த நபர்களின் வசிப்பிடம் மற்றும் அடையாள ஆவணங்களின் சான்றிட்ட நகல் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

7. அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட காலகட்டத்தில் அதை எழுதி கொடுத்த நபர்களின் வசிப்பிடம் மற்றும் அடையாள ஆவணங்களை நேரடியாக சரிபார்க்கப்படும், அந்த ஆவணங்கள் எழுதி கொடுக்கப்படும் ஆவணத்துடன் இணைக்கப்படாது. நான் அனுப்பிய பதில் கடிதங்கள் அசாஆ 134 மற்றும் 138 ல் அதை எழுதி கொடுத்த நபர்களின் வசிப்பிடம் மற்றும் அடையாள ஆவணங்கள் இணைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் இரண்டாவது பக்கத்தில் அதை எழுதி கொடுத்தவர் மற்றும்

சாட்சிகளின் விவரங்கள் எழுதப்பட்டிருக்கும், அதை தான் நான் ஆவணத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளேன், ஆனால் அவ்வாறு இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ 135 மற்றும் 139 கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களுக்கு இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65 பி சான்றுகள் நான் வழங்கவில்லை என்றால் சரிதான். ( அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்விக்கு பதிவு துறையில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்த ஆவணங்கள் என்பதனால் இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65 பி சான்றுகள் தேவையில்லை என்று ஆட்சேபனை செய்தார்.)

8. அசாஆ 135 மற்றும் 139 ஆவணங்கள் புத்தகம் 4 ல் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். பதிவு சட்டம் பிரிவு 55 ன் படி புத்தகம் 4 க்கு அட்டவணை பராமரிக்கப்படவேண்டும் என்றால் சரிதான். 2002 வரை நடைமுறையில் இருந்தது. அதன் பிறகு கணினி மூலம் அட்டவணை பராமரிக்கப்பட்டது. அசாஆ 135 மற்றும் 139 ஆவணங்களுக்கு கணினிமயமாக்கப்பட்ட அட்டவணை வழங்கப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ 135 மற்றும் 139 ல் உள்ள எழுதி கொடுத்தவரின் கையொப்பங்கள் ஒரே மாதிரி இல்லை என்றால் சரிதான்.

(1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது. 5 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், 5 வது எதிரி தரப்பில் குறுக்க விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது. )

மறுவிசாரணை – இல்லை

Typed to my dictation in Open Court,
read over to the deponent and admitted
to be correct.

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL

XXV Metropolitan Magistrate,
Egmore, Chennai – 08.